# சூரிய காந்தி

SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 திங்கட்கிழமை 9 - 2 - 1998 இதழ் 8



பொது சன நூலகம்
11 FEB 1998
மாநகராட்சி
யாழ்ப்பாண



வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# மணலாற்றில் படையினர் மீது புலிகள் திடீர் தாக்குதல்!

## நான்கு இராணுவத்தினர் பலி

**மணலாற்றில் ரோந்து சென்றுகொண்டிருந்த படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

கடந்த வெள்ளிக்கிழமை மணலாற்றுப்பகுதியில் இராணுவத்துக்கும் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், மணலாறு சாந்தோம்குளம் இராணுவ முகாமிலிருந்து ரோந்துசென்றுகொண்டிருந்த படையினர் மீது தாம் நடத்திய அதிரடித்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் பல ஆயுதங்களையும் தாம் படையினரிடமிருந்து கைப்பற்றியுள்ளதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர். புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு,

| | |
|---|---|
| ரி.56 ரக துப்பாக்கிகள் | -4 |
| கைக்குண்டுகள் | - 4 |
| ரவைக்கூடுகள் | - 12 |
| ரவைகள் | - 360 |

மேற்கூறப்பட்ட ஆயுதங்களே புலிகளால் கைப்பற்றப்பட்டவை. இத்தாக்குதலில் தமது தரப்பில் இழப்பு ஏதுவுமில்லையெனவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

### வீரச்சாவு

நேற்று முன்தினம் மூன்று புலிகள் வீரச்சாவடைந்ததாக புலிகளின் குரல் அறிவித்துள்ளது வீரவேங்கை முகுந்தன் புண்ணிய மூர்த்தி ரதிஸ்வரன் சொல்லோவியன் (வேலுயோகேந்திரன் புதுக்குடியிருப்பு)

இவர்களுடன் பத்மநாதன் தயாபரன் ( யாழ்ப்பாணம் ) துரை (அக்கராயன் குளம்) ஆகிய நாட்டு பற்றாளர்களும் வீரச்சாவடைந்துள்ளார்'

## ஆயுதத் தொழிற்சாலை குருநாகலில் கண்டுபிடிப்பு

குருநாகல் மாவட்டத்தில் ஆயுதத்தொழிற்சாலையொன்று பொலிஸாரால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. இவ்வாயுதத் தொழிற்சாலையை ஓய்வு பெற்ற மாலுமி ஒருவர் நடத்தி வந்தது விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தொடரும் மர்மக் கொலைகள்

வவுனியாவில் மர்மக் கொலைகள் அதிகரித்து வருவதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1994ம் ஆண்டு தேர்தலுக்குப் பின் வவுனியாவில் இதுவரை முப்பத்தைந்து மர்மக் கொலைகள் இடம் பெற்றுள்ளன;

இந்த வருடம் பிறந்த பின்னர் ஐந்து பேர் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் வவுனியா மக்கள் மிகுந்த பீதியுடனும் அச்சத்துடனும் தமது காலத்தையோட்டுகின்றனர்.

## விமானப்படை விரைவில் நவீன மயப்படுத்தப்படும்

இலங்கை விமானப்படை வருங்காலத் தேவைகளுக்கு முகம் கொடுக்கும் விதத்தில் நவீன மயமாக்கப்படவிருக்கிறது. திட்டமிட்ட முறையில் தொழில் நுட்ப அம்சங்களில் விசேட கவனத்தைச் செலுத்தி இந்த நவீன மயமாக்கல் முயற்சி மேற்கொள்ளப்படும் என்று விமானப் படைத் தளபதி எயர் மாஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்,

ஏற்கனவே சில துறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன, நவீன இயந்திர உபகரணங்கள் பெறப்பட்டுள்ளன, தற்காலிக தேவைகளுக்கு உகந்த விமானங்கள் தருவிக்கப்பட்டுள்ளன, இதன் காரணமாக வடக்கு கிழக்கில் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் விமானப்

6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு குண்டு வெடிப்பு தகவல் அறிந்தோர் தரலாம்

### பொலிஸ் தகவல்

நேற்று முன்தினம் கொழும்பு கொம்பனித்தெருவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என நம்பப்படும் சந்தேக நபர் பற்றிய தகவல்களைத் தந்துதவுமாறு பொலிஸார் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

இருபத்து நான்கு வயதான இந்திராணி கணேசன் என்ற இந்தப் பெண் கொழும்பில் தங்கியிருந்தமை தொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறு பொலிஸார் பொது மக்களைக் கேட்டுள்ளனர்.

## வடமராட்சிக்கு விரைவில் நூறு தொலைபேசி இணைப்புகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கும் வேலைத்திட்டங்கள் ஆரப்பிக்கப்பட்டுள்ளன. இதன் முதற்கட்ட நடவடிக்கையாகஎன்பது அடி உயரமுடைய தொலைத் தொடர்புக்கோபுர வேலைகள் நேற்று நிறைவடைந்தன.

பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலை வளவில் அமைக்கப்பட்டுள்ள இத் தொலைத் தொடர்புக்கோபுரத்தின் மூலம், வடமராட்சிப் பகுதியில் நூறு தொலைபேசி இணைப்புக்கள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளது. வடமராட்சி இராணுவப்பொறுப்பதிகாரி பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனைகளுக்குஇணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தொலைத் தொடர்பு வேலைத்திட்டங்களை தொலைபேசிப் பரிசோதகர் தலைமையிலானகுழுவொன்று மேறபார்வை செய்து வருகிறது.


மிதிவண்டிகள், பெயின்ற் வகைகள், இரும்பு கட்டடப் பொருட்கள்,
தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், மிதி வண்டி உதிரிப்பாகங்கள்,
வானொலிப் பெட்டிகள் என்பன

மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மலையக வேலை நிறுத்தம்

# சந்திரிகா - தொண்டா பேச்சு

தோட்டத்தொழிலாளர் வேலை நிறுத்தம் குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமானும் தொழிலமைச்சர் டபிள்யூ.டி. ஜே. செனிவிரத்னாவும் நேற்றுக் காலை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இப்பேச்சு வார்த்தையின் போது தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு அடிப்படைச்சம்பளமாக 95 ரூபா வழங்குவதென்றும் தேநீர் போனஸ்ஸாக 6 ரூபா வழங்குவதென்றும் மொத்தம் 101 ருபாவை ஒரு நாள் சம்பளமாக தோட்டத்தொழிலாளர்கள் பெற்றுக்கொள்வார்களெனவும் நேற்றைய பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டது.

இந்த விடயத்தை ஜனாதிபதி தோட்டத்துரைமார் சங்கத்துடன் பேசி ஒரு முடிவுக்கு வருவார் என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார். தற்போது இந்தியா புறப்பட்டுள்ள திரு. தொண்டமான் வெள்ளிக்கிழமை நாடு திரும்புவார்.

இதேவேளை நியாயமான சம்பள உயர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என தொழிற் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வேலை நிறுத்தம் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என்பதால் கூடிய விரைவில் இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இதற்கிடையில் பிரதியமைச்சர் சந்திரசேகரன் சில கூட்டங்களில் உரையாற்றும் போது இந்தப் பிரச்சனை 6 லட்சம் தொழிலாளரின் வாழ்க்கைப்பிரச்சனை என்றார்.

இது பற்றி தொழிலாளர்களுக்கு விளக்கிக் கூறிய பிரதியமைச்சர் சந்திரசேகரன் ஜனாதிபதிக்கு விடுத்த வேண்டுகோளில் இந்த விடயத்தில் தலையிட்டு தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க தோட்டக்கம்பனிகளுக்கு நெருக்குதல்கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை தோட்ட தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் தேயிலை ஏற்றுமதியில் எவ்விதபாதிப்பும் தற்போது ஏற்படும் சாத்தியம் இல்லை என தேயிலை தரகர்கள் கூறியுள்ளனர். சம்பள உயர்வு கோரி தோட்டத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவருவது தெரிந்ததே. போதுமான அளவு தேயிலை கையிருப்பில் உள்ளதால் தேயிலை ஏற்றுமதியினை இவ்வேலை நிறுத்தம் சில வாரங்களுக்கு பாதிக்காது என அத்தரகர்கள் மேலும் தெரிவித்தனர்.

## புலிகள் தற்கொலை

(கொழும்பு)

சாவகச்சேரியில் உள்ள மீசாலைப் பகுதி நேற்று முன் தினம் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

இச்சுற்றி வளைப்பில் இரண்டு எல். ரீ. ரீ. ஈ, உறுப்பினர்கள் கைக்குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்து கொண்டனர் என்று படை நடவடிக்கைத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது. தொண்டைமானாறைச் சேர்ந்த நிரோஷ் பொட்டக் கண்ணன் ஆகியோரே பலியான புலிகள் என அது மேலும் தெரிவிக்கிறது.

## நாளைய நட்புக்கு கட்டியம்

எல்லோருக்கும் வெற்றிலை பாக்கு வைக்கிறது

**காங்கிரஸ் தேர்தல் அறிக்கை**

பெரிய நிம்மதி!

இந்த வருட காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் சோஷலிச முழக்கமோ, விளங்காத கவர்ச்சித் திட்டமோ தென்படவில்லை.

சுதந்திர சந்தையின் தீவிர ஆதரவாளராகத் தன்னைக் காட்டிக் கொண்டு அடுத்த ஐந்து வருடங்களுக்கு தேசத்தை ஆள அடிபோடுகிறது காங்கிரஸ் கட்சி.

முன்பெல்லாம் தாராள மயமாக்கலின் கூடவே உசிதப்படி முடிவெடுக்கும் அதிகாரத்தால் நரசிம்மராவ் அரசியல் ஊழலின் தாண்டவம்!

அதற்கு இது தேவலாம்!

ஆனாலும் முன் நோக்கி தயங்கியபடி ஒரு அடிதான் வைத்திருக்கிறது காங்கிரஸ்.

தேர்தல் அறிக்கையில் ஊதாரித்தனமான அரசுச் செலவுக் குறைப்புக்கு உத்தரவாதம் இல்லை. பொதுத்துறை நிறுவனங்களின் ஊளைச் சதையைக் கரைக்க ஏற்பாடு இல்லை. அதிகார வர்க்கத்தின் மிரட்டும் கெடுபிடி தளர வழி இல்லை.

காங்கிரஸ் சீர்திருத்தச் செம்மலாக பீடு நடை போடுகிறது என்ற கருத்தும் காங்கிரஸ் கோட்டா தர்பார் நடத்திக் கொண்டே டஞ்சை பராரிகளுக்கு தாராளக் கை காட்டுகிற பழைய கட்சி தான் என்ற கருத்தும் செட்டிக்காரத்தனமாக கலந்த கதம்பம் தான் தேர்தல் அறிக்கை.

இந்த இரட்டைத் தோற்றம் ஏன் வந்தது என்பது தெளிவு. 1998 தேர்தலில் தன்னால் பழுதில்லாமல் கரை சேர முடியாது என்பது காங்கிரசுக்கு தெரிந்து போய் விட்டது என்பதை தேர்தல் அறிக்கையின் தொனி காட்டுகிறது,

''அரசை அமைப்பதற்கான போராட்டமல்ல இது, அரசை நடத்துவதற்கான யுத்தம்'' என்கிறது.

அதாவது உறுதி மொழிகள் அடங்கிய பட்டியல் அல்ல இந்த அறிக்கை, தேர்தலுக்குப் பிறகு மறுபடியும் ''பொது குறைந்த பட்ச திட்டம்'' உருவாக்க இது ஒரு முன்னுரை போல!

அதனால் தான் ''பொருளாதார சுதந்திரம் ''ஏழைகளின் ஆட்சி''

என்றெல்லாம் வசனம் பேசுகிறது அறிக்கை இது ஐ. மு. வில் சில பிரிவினரை வளைக்கும் நோக்கத்துடன்

தேர்தல் திருவிழாவில் தேர்தல் அறிக்கைகள் பஞ்சு மிட்டாய் போல!

கூட்டணிகளே கதி என்றாகி விட்ட இந்த யுகத்தில் நாளைய பேரங்களுக்கான கையேடு என்று தேர்தல் அறிக்கைகளுக்கு இன்னொரு பரிணாமமும் சேர்ந்து விட்டது.

- ''இந்தியா ருடே'', பிப்ரவரி 4


அழகும் நவீனமும் நிறைந்த
தங்க வைர நகைகள்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

சிங்கப்பூரில் இருந்து வெளியாகும்
புதிய டிசைன் நகைகளை
உடனுக்கு உடன் பெற்றுக்கொள்ள

சாரங்கா
நகை மாடம்
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:
அருள்முருகன் நகை அகம்
96/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்:
சிவா நகை மாடம்
யாழ் வீதி. சாவகச்சேரி.


## திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத். மகா வித்தியாலயத்தில் உள்ளக விளையாட்டரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கைக் கல்லூரி அதிபர் வீ. மாணிக்கம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இவ் உள்ளக விளையாட்டரங்கு காரணமாக 'ரேபிள் ரென்னிஸ், சதுரங்கம், கரம்' போன்ற விளையாட்டுக்களில் மாணவர்கள் ஈடுபட வாய்ப்புக் கிடைத்துள்ளது. விரைவில் 'பட்மின்ரன்' விளையாட்டு அரங்கமும், நிர்மாணிக்கப்பட உள்ளது.

## நீர்வேலியில் மோதல்

நேற்று முன்தினம் நீர்வேலிப்பகுதியில் இடம் பெற்ற மோதல் கம்பவத்தில் இரண்டு புலிகள் கொல்லப்பட்டதாக நட்வடிக்கைத் தலைமையலுவலகம் கெய்தி வெளியிட்டுள்ளது. வானொலி கருவி, மருந்துப் பொருட்கள், உட்பட சில இராணுவ உபகரணங்களை படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் படையினர் தரப்பில் நான்கு பேருக்குக் காயம் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்ட்டுள்து.

## நிலநடுக்கம்

ஆப்க்காணிஸ்தானில் ஏற்பட்டநில நடுக்கத்தினால் 17.000 யிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் அழிந்து நாசமாகி உள்ளன. தாக்கப்பட்ட இடங்களில் மக்கள் கடும்குளிரினால் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

## கோட்டங்கள் பிரிக்கப்படும்

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாந் திகதி தொடக்கம் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டம் இனி தனித்தனிக் கோட்டமாக வேலணையென்றும் ஊர்காவற்றுறையென்றும் அழைக்கப்பட்டு கோட்டக்கல்வி அதிகாரிகளும் நியமிக்கப்படுவர்.

## இடம் பெயர்ந்தோருக்கும் மீளக் குடியமர்வு நிவாரணம்

பாதுகாப்புக் காரணங்களுக்காக சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாமல் யாழ்ப்பாணத்தில் உறவினர்களின் வீடுகளில் வசிக்கும் 55,000 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

இவர்கள் வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தலைவருக்கு தமது நிலைமையை விளக்கி அனுப்பிவைத்த மகஜரை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதற்கான விபரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை கேட்டுள்ளது. இவர்களுக்கு நிவாரணம் வழங்க 23 கோடி ருபாவை அமைச்சு விரைவில் ஒதுக்க உள்ளது. இதுவரை மீளக் குடியமர்வு நிவாரணம் பெறாதவர்களையும் கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் அது மேலும் கேட்டுள்ளது.

## பழைய நிலை திரும்பிவிட்டது

யாழ்ப்பாணத்தில் பழையநிலை வந்திட்டுதாம்!
கொழும்புச் செய்தி பலமாகச் சொல்லுது!
எஸ் எல் பி ஸி யும் சத்தமாகக் கத்துது!
பழைய நிலை யெண்டால் என்னவாம்!
பயங்கர(?) வாதத்துக்கு முதலிருந்த நிலையாம்!
அப்படி யெண்டால் என்ன . . . ?
கசிப்பு கண்மண் தெரியாமல் குடிக்கலாம்!
கஞ்சாவை அஞ்சாமல் அடிக்கலாம்!
சிவப்பு விளக்குகள் சிறப்பாக எரியலாம்!
சின்ன வீடுகள் 'செட்டப்' பண்ணலாம்!
ஆபாசப்படங்கள் அதிகமாய்ப் பார்க்கலாம்!
மினிசினிமாக்கள் மிதமிஞ்சி இயங்கலாம்!
சண்டியர் சந்தியில் சங்கிலி பறிக்கலாம்!
'ஏரியா' விற்கொரு சண்டியர் குத்தகை எடுக்கலாம்!
ரெளடிகள் கலாசாரம் தழைத்தோங்கலாம்!
தட்டிக் கேட்பவனை தட்டி விடலாம்!
உண்மைதான் . . . . !
யாழ்ப்பாணத்திலை பழைய நிலை திரும்பிவிட்டது!

பருத்தித்துறை
-எஸ் - மணிவண்ணன்

## கவலைகள் இல்லை அங்கே...

புல்லினைக் கொண்டு கூடு
புனைந்திடும் மரத்தில் அந்த
மெல்லிய பஞ்சு மெத்தைக்
கூட்டினுள் கவலை இல்லை
செல்லமாய்க் காதல் பேசிக்
கொஞ்சிடும் குருவி வாழ்வில்
எல்லையில்லாத இன்பம்
என்றுமே குலவும் காண்பீர்...

காலையில் உறக்கம் விட்டுக்
களைப்பின்றி இரைகள் தேடி
சோலையில் குளிர்ந்த காற்றில்
சுகமுடன் துள்ளிக் கூடி
நீலமாம் வானில் நீந்தி
நிழல்தரு மரத்தில் ஆடி
மாலையில் கூடு சேர்ந்து
மகிழ்வுடன் உறவு கொள்ளும்

எரிபொருள் அரிசி இல்லை
என்றிடும் கவலை இல்லை
வரியில்லை வாடகைகள்
வதைத்திடும் துயர்கள் இல்லை
பெரியவர் சிறியோர் என்ற
பேதங்கள் சொல்வார் இல்லை
உரிமைப்போர் இல்லை அங்கே
உயர்ந்த நல்லன்பு உண்டு.

- இரி

'சூரியகாந்தி' போட்டி இல.2

பரிசு

# ஆயிரம் ரூபாய்!

## ரூபா 1000.00

இது ஒரு சுவையான போட்டி.
கொஞ்சம் மூளைக்கு வேலை தரும் போட்டி.
நீங்கள் எழுதிய விடை சரியானதா என்பதை நீங்களே 'செக்' பண்ணி அறிந்து கொள்ளக் கூடிய போட்டி.
யார் வேண்டுமானாலும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். வேறு கட்டுப்பாடு கூட எதுவும் கிடையாது.
பரிசுப் பணம் ஆயிரம் ரூபாய்!

முக்கியமான நிபந்தனை: போட்டிக்குரிய விடைகள் கீழே தரப்பட்டிருக்கும் படிவத்தில் மட்டுமேதான் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

விடைகள் அடங்கிய ஒட்டப்பட்ட தபால் உறைகளை எமது அலுவலகத்தில் நேரடியாகவும் ஒப்படைக்கலாம் அல்லது தபாலிலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சூரிய காந்தி போட்டி இல:2'' என்பதை மறவாது குறிக்கவும்.

ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை எழுதி அனுப்பி இருப்பின், பரிசுப் பணம் சமமாகப் பங்கிட்டு வழங்கப்படும்.

இப்போட்டி தொடர்பான பிற தொடர்புகள் எதுவும் நேரடியாகவோ அல்லது கடித மூலமோ வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

தெளிவான எழுத்துக்களில் எழுதப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும்.

போட்டிக்கான விடைகள் யாவும் எமது அலுவலகத்தில் 20 - 02 - 98 மாலை 5.00 மணிக்கு முன் கிடைக்க வேண்டும்.

போட்டி தொடர்பான சகல விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்
'சூரியகாந்தி'

சரி
போட்டி இதுதான்-

ஒரு சின்னப் பெருக்கல் கணக்கு.

$$AB \times CDE = ADCEB$$

இங்கே இரண்டு இலக்கங்களாலான **AB** என்னும் எண், மூன்று இலக்கங்களாலான **CDE** என்னும் எண்ணைப் பெருக்க, விடையாக **ADCEB** என்னும் ஐந்து இலக்கங்களைக் கொண்ட எண் கிடைக்கிறது.

இங்கே பெருக்கிய எண்களும் உண்டு, விடையாக வந்த எண்ணும் உண்டு.

ஆனால்-

இந்தப் பெருக்கல் கணக்கில் வரவேண்டிய இலக்கங்களுக்கு பதிலாக- சங்கேதக் குறிகளாக A, B, C, D, E என்னும் எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன.
ஒவ்வோர் எழுத்தும் பூச்சியம் அல்லாத ஒரே ஒரு இலக்கத்தை மட்டுமே குறிக்கிறது.
ஒவ்வோர் எழுத்தும் எந்த இலக்கத்தை குறிக்கிறது?
இதைத்தான் நீங்கள் கண்டு பிடித்து எழுத வேண்டும்.
எங்கே கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்!

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர், 'சூரியகாந்தி'
68/1 இராசாவின்தோட்டம் வீதி
யாழ்ப்பாணம்.

நீங்கள் விடை எழுதி அனுப்ப வேண்டிய படிவம்:-

எழுத்துக்கள் குறிக்கும் இலக்கங்கள்

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| | | | | |

ஒவ்வோர் எழுத்துக்கு கீழேயும் அந்த எழுத்துக் குறிக்கும் இலக்கத்தை எழுதவும்

அனுப்பியவர்

பெயர்:.............................

முகவரி:.......................,

.............................
கையொப்பம்

# யாழ்ப்பாணக் கல்வி நிலை

யாழ் குடா நாட்டில் கல்வி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. கிழக்காசியாவில் முன்னொரு காலத்தில் யாழ். குடா நாடுதான் கல்வியில் முன்னணியில் திகழ்ந்தது. ''யாழ்ப்பாணம்'' என்று கூறியதும் கல்வியின் வளர்ச்சியே ஒரு காலத்தில் மேல் எடுத்திருந்தது. ஆனால் இன்று அந்த நிலை மாறியுளளது மிகவும் வருந்தத்தக்க நிலை தான். யுத்தத்தினால் ஏற்பட்ட தாக்கம் ஒருபுறமிருக்க அதனை காரணமாக வைத்து அரசாங்கமும், அரசியல்வாதிகளும், அரசாங்க ஊழியர்களும் கல்வி முன்னெடுத்து செல்ல இடம் கொடுக்காமையும் காரணமாகும்.

1970ம் ஆண்டு தரப்படுத்தலை மையமாக வைத்து தமிழருடைய கல்விக்கு சிறிலங்கா அரசாங்கம் ஆப்பு வைத்தது. ஆனால் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தாக்கம் ஒரு கொடூர யுத்தத்திற்கு அரசாங்கம் முகம் கொடுக்க வைத்தது. இன்று அதை உணர்ந்து ஆரம்பக் கல்வியைக் கூட சிதைத்து விடுவதற்கான திட்டங்களை தீட்டியுள்ளது. அறிவுக் கொழுந்துகளை விருட்சமாக வளரவிட்டு வெட்டுவதை விட கொழுந்திலே கிள்ளி எறிய திட்டமிடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் சீர்குலைந்து நிலை தடுமாறி நிற்கும் கல்வியை நேரான, சீரான பாதையில் எடுத்துச் செல்லவேண்டிய நிலையிலும் கூட மறைமுகமான தடைகள் இன்று போடப்பட்டுள்ளன. இதற்கு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கூட ஒரு அளவுக்கு உடந்தையாக இருக்கின்றார்கள் என்றே கூறவேண்டும்.. மாவட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்யும் உறுப்பினர்கள் நமது அரசியல் குறுகியஇலாபத்தை மையமாக வைத்து நீண்டகால பாடசாலை அபிவிருத்திக்கு குறைந்தளவில் நிதி ஒதுக்கீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். குடா நாட்டின் யுத்தம் காரணமாக சுமார் 20,125 மாணவர்கள் தமது ஆரம்பகல்வியை கூடதொடர முடியாது இருப்பதாக அண்மையில் வந்த புள்ளி விபரம் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் குறைந்த வேதனத்தில் கடைகள், வீடுகள், மீன் பிடித்தல், விவசாய நடவடிக்கைகள், மரமேறுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் கல்வியை தொடருவதற்கு பொருளாதார காரணி முக்கிய இடத்தை வகிக்கின்றது. இப்படிப்பட்ட மாணவர்களின் அனேகர் கிராமப்புறத்தை சேர்ந்தவர்கள் என்பது தற்போது எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களில் தெளிவாக தெரிவிக்கின்றன.

இதில் 18 சதவீதத்தினர் மட்டுமே யாழ். நகரை அடிப்படையாகக் கொண்டவர்கள். இதிலும் பெரும் பாலானோர்கள் மீன்பிடிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இராணுவ நடவடிக்கையின்போது குடும்பத் தலைவர்களையும், உழைப்பாளிகளையும் இழந்து (வறுமையால் வாடும் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள்,) ஆரம்பக்கல்வியை கற்கச் செல்வதை தவிர்த்து இன்று தொழில் செய்கின்றனர்.

கிராமப்புற பாடசாலைகள் செயலிழந்த நிலையில் காணப்படுகிறது. எனவே தமது கல்வியை நகரத்தை அண்டிய பகுதிகளில் தொடர வேண்டியிருப்பதால் தற்போது இராணுவ கெடுபிடியினால் இம் மாணவர்கள் தமது கல்வியை தொடர முடியாது இருப்பதுடன் இராணுவ சோதனை முகாம்களில் ஏற்படும் திடீர் கைதுகள் காணமல் போதல், பாலியல் வல்லுறவு போன்ற நடவடிக்கையினால் தமது பிள்ளைகளுக்கும் ஏற்படும் என்ற பீதியினால் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதை பெற்றோர் தவிர்த்து வருகின்றனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளை மீண்டும் பாடசாலை ஏற்கவும் மாட்டாது. மாணவர்களும் அந்த இடைவெளியை ஈடுசெய்ய முடியாது இந்தநிலை தொடர்ந்து நீடிக்குமாயின் எதிர்காலத்தில் யாழ். குடா நாட்டில் எழுத்தறிவு இல்லாதவர்கள் அனேகர் தோன்ற வாய்ப்பாக இருக்கும் என்பது மட்டும் உண்மை.

யாழ்.குடா நாட்டில் உள்ள தேசியப் பாடசாலைகள் கூட மலையகத்தில் உள்ள சிங்கள கோட்ட பாடசாலைகள் கொண்டுள்ள வளத்தை பெற்று இருக்கவில்லை என யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி பாலசுந்தரம்பிள்ளை சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. ஓரிரு பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த. (சா/த), (உ/த) பரீட்சையில் பெறும் திறமை சித்திகளை பெறும் விரல் விட்டு எண்ணக்கூடிய மாணவர் பெறும் பெறு பேறுகளை மையமாக வைத்து தற்போதுயாழ். குடாநாட்டு கல்வித் திறனை நாம் அளவீடு செய்ய முடியாது. குடா நாட்டில் முழுமையாக பெறும் பெறுபேறு கொழும்பு, கண்டி கம்பளை போன்ற மாவட்டங்களில் ஒரு பாடசாலை பெறும் பெறுபேறுக்கு சமமானவை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண தேசிய பாடசாலைகளுக்குக்கூட மின்வசதி நீர்வசதி, ஆய்வுகூடங்களுக்கு தேவையான தொழில் நுட்ப கருவிகள் மற்றும் இரசாயன மருந்துகள் என்பன கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. இது காரணமாக சில வசதி படைத்த பெற்றோர் தமது பிள்ளைகளை ஏனைய பகுதிகளுக்கு பாதுகாப்பு கருதி இடம்பெயர்வதினால் தேசிய கல்லூரிகளின் கல்வி பெரிதும் பாதிக்கப்படுகின்றது. கம்பியூட்டர் தொழில்நுட்ப கருவிகளை கொடுப்பதன் மூலம் மட்டும் பாடசாலை தேவையை நிவர்த்தி செய்ய முடியாது அதனை பயிற்றுவிப்பதற்கு தகுந்த ஆசிரியர் வசதி, மின்சாரம், மற்றும் கல்வி கற்கக் கூடிய சூழல் என்பன மிகவும் அவசியமானதாகும்.

ஆசிரியர்களுக்கு நாட்டின் பலபகுதிகளும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. ஆனால் யாழ். குடாநாட்டை பொறுத்தமட்டில் உரியநேரத்தில் இப்பயிற்சிக்காக அழைப்புக்கள் கிடைக்கப் பெறுவதில்லை. இதனால் ஆசிரியர்கள் புதிய அணுகுமுறைக்கு ஏற்ப கல்வியை மாணவர்களுக்கு கொடுக்கமுடியாத நிலை ஏற்படுகின்றது. இது மட்டும் அன்றி பாடத்திட்டங்கள் தொடர்பான மாற்றங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுவதில்லை. இதனால் பாடத்திட்ட மாற்றங்களுக்கு அமைய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க முடியாத நிலையில் ஆசிரியர்களும் அதற்கு அமைய தமது கல்வியை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மாணவர்களும் இருக்கின்றனர். 1997ம் ஆண்டு புதிய பாடத்திட்டம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சை முடிந்த பின்னர் ட அப்பாடங்களுக்குரிய பாடவிதானமும் கிடைக்கப்பெறவில்லை.

இதற்கு எமது கல்வி திணைக்களமும் பதில் கூறத்தான் வேண்டும். கல்வி திணைக்களம் கொழும்பில் இணைப்பாளர் ஒருவரை நியமனம் செய்துள்ள போதும் அவர் இவற்றைத் தவிர்த்துத் தனக்கு சம்பளத்தை விட கூடிய வருமானம் கிடைக்கும். வேலைகளில் ஈடுபடுகின்றார். கல்வி திணைக்கள கொள்வனவு செய்வது மட்டும் அன்றி வேறு வியாபாரத்திலும் ஈடுபடுகின்றார். இவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் யாழ். கல்வித் திணைக்களம் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் குடா நாட்டில் மொத்தமாக 502 பாடசாலைகள் இருக்கின்றது. இதில் 438 பாடசாலைகள் இயங்குகின்றன். 64 பாடசாலைகள் முற்றாக இயங்காத நிலையில் இன்று இருக்கின்றது. இயங்கும் பாடசாலைகளின் 392 பாடசாலைகள் மட்டுமே சொந்த கட்டிடத்தில் இயங்குகின்றது. 26 பாடசாலைகள் வேறு கட்டிடத்தில் இயங்குகின்றன. 20 பாடசாலைகள் வேறு பாடசாலைகளுடன் இணைந்து இயங்குகின்றன.

இதுவரை மக்கள் வதிய அனுமதி அளித்த பகுதிகளில் உள்ள 12 பாடசாலைகள் கட்டிடங்களை இராணுவம் முழுமையாகவோ அன்றி பகுதிகளாகவோ முகாம்களை அமைத்துள்ளது. ஏனைய 34 பாடசாலைகள் யுத்தத்தினால் அழிந்து காணப்படுகின்றது. இன்னும் சில பகுதிகளில் அதாவது அதி பாதுகாப்பு வலையம் என கூறப்படும் பகுதிகளின் பாடசாலைகளுக்கு என்ன நடந்தது என யாராலும் குறிப்பிட்டு கூற முடியாது. பொதுமக்கள் பாவனை உட்படாத பகுதி பாடசாலைகள் வேறு, வேறு, பாடசாலைகளுடன் இணைந்து பழைய பெயரில் இயங்குகின்றது.

யாழ். குடாநாட்டின் கல்வி அலகுகளை வலயம் ஒன்று வலயம் இரண்டு என பிரிப்பதுடன் கிளிநொச்சியின் பளை கோட்ட கல்வி அலுவலம் இணைக்கப்படுகின்றது. வலயம் ஒன்றில் யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, சாவகச்சேரி, என்று ஆறு கோட்ட கல்வி அலுவலகங்களாகவும் வலயம் இரண்டில் கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை என்று எட்டுக் கோட்டக் கல்வி அலுவலங்களாகவும், உள் அடங்கியுள்ளது. ''ரிவிரெச'' இராணுவ நடவடிக்கைக்கு முன்னர் (225581) மாணவர்கள் யாழ். குடா நாட்டில் கல்வி பயின்றனர். ஆனால் 1997 ஒக்டோபர் மாதம் எடுத்த தகவல்படி ஒரு லட்சத்து பதினையாயிரத்து முப்பத்தாறு (115,036) மாணவர்கள் மட்டும் கல்வி பயில்கின்றனர். எனவே மாணவர் தொகையில் பெரிய வீழ்ச்சி காணப்படுகின்றது.

இதே போன்று 1995-ம் ஆண்டில் ஆறாயிரத்து தொள்ளாயிரம் ஆசிரியர் யாழ். குடா நாட்டில் கல்வி கற்பித்தனர். ஆனால் இன்று நாலாயிரத்து இருநூற்றி எழுபத்திரண்டு ஆசிரியர்கள் மட்டும் காணப்படுகின்றனர்.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

- நிவேதா -

# யாழ்ப்பாணக் கிரிக்கெட் கோஷ்டியின் தென் இலங்கை சுற்றுலா

யாழ்ப்பாணக் கிரிக்கெட் தெரிவுக் குழு சென்ற வாரம் தென் இலங்கை சுற்றுலா ஒன்றை கிரிக்கெட் போட்டிகளில் சினேகபூர்வமாகப் பங்கேற்கும் நோக்கத்துடன், அரசாங்க ஆதரவுடன் மேற்கொண்டது. மொத்தம் 5 போட்டிகளில் பங்கு பற்றவிருந்த யாழ் தெரிவுக் கோஷ்டிதுர் அதிஷ்டவசமாக 3போட்டிகளில் மட்டுமே பங்குபற்றியது. காலி, மாத்தறை, கொழும்பு நகரங்களில் விளையாடிய சகல போட்டிகளிலும் தோல்விகளைத் தழுவிக் கொண்டது. அதிலும்கொழும்புக் கோஷ்டியுடன் படுதோல்வி, குறிப்பிடத் தக்கது. ஆரம்ப துடுப்படி வீரர்கள் சகல போட்டிகளிலும் இனிது விளையாடி, தென்னக விளையாட்டுப் பிரியர்களின் கரகோஷத்தையும், ஆதரவையும் பெற்றனர். ஏனையோர் சிறப்பாக ஆடாவிட்டாலும், அவர்களைக் குறை கூறமுடியாது, ஏனெனில் புற்தரை ஆட்டம் அவர்களுக்குப் புதிய அனுபவம். புற்தரை ஆட்டத்திற்குப் பதிலாக, கயிற்றுப் பாய் விரித்த தரையில் விளையாடியிருந்தால், நிச்சயமாக சிறப்பாக ஆடியிருப்பார்கள். கொழும்பிலும், தென்மாகாணத்திலும் அதற்கேற்ற வசதிகள், சில பாடசாலைகளில் உண்டு.

போட்டிகளில் பங்குபற்று முன்னர் குறைந்தபட்சம் ஒரு கிழமையாவது ஓர் புற்தரை மைதானத்தை ஒழுங்கு செய்து, பயிற்சி பெற்றிருந்தால் உறுதுணையாக இருந்திருக்கும். நம்வீரர்கள் நிச்சயமாக நன்றாக விளையாடியிருப்பார்கள்.

யாழ் கிரிக்கெற் சங்கம் விட்ட மாபெரும் தவறுகள் பின்வருவனவாகும்:-

(1) புற்தரை அனுபவமற்ற வீரர்களுக்கு தயாரிக்கப்படாத புற்தரையாயினும் சரி, நன்கு உருளையால் அமத்தி, தரையை இறுகப்பண்ணி அதில் ஒரு சில நாட்கள் பயிற்சி கொடுத்திருந்தால், பந்தை நன்கு அவதானிக்கக் கூடிய அனுபவம் ஏற்படும். உதாரணமாகக் கூறப்போனால், புற்தரையில் துடுப்பாடச் செல்லு முன்னர் வீரர்கள் வெறும் புற்தரையில் பயிற்சி பெற்றுச் செல்வதை நீங்கள் கண்டிருப்பீர்கள், அது ஒரு முன் அனுபவமாகத் திகழும்.

2) நன்கு புற்தரையில் விளையாடிய அனுபவமற்றோரைப் பொறுப்பாளர்களாக நியமித்தமை அனுபவ ரீதியில், புற்தரை, வேகப்பந்து வீச்சாளருக்கு உதவியாக இருக்கிறதா? சுழல் பந்து வீச்சாளருக்குச் சாதகமாக இருக்கிறதா? துடுப்படிக்குச் சாதகமாக இருக்கிறதா? என்பதை நன்கு அறிந்து, வீரர்களுக்கு, அறிவுறுத்தல்கள் வழங்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

3) தென் இலங்கை வீரர்கள் பலவிதமான முறையில்வரும் பந்துகளை அடிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அதை முறியடிக்கப் பந்தை விதம் விதமாகமாற்றி துடுப்பாட்டக்காரரை நிலைகொள்ளச்செய்யாமல் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் வேண்டும்.

4) புற்தரையில் புல்லுடன் மண் கிளம்பநேரிடும். உடனடியாகத் துடுப்பாட்டவீரர் அப்பகுதியை அம்மண்ணைக் கொண்டு நிரப்பி, மட்டையின் பின் பக்கத்தால் தட்டிச் சமப்படுத்தவேண்டும்.

5) சம்பந்தப்பட்ட மூன்று பிட்டணிகளிலும் விக்கெட்டுக்களை வீழ்த்தக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. விசேடமாகக் கூறப்போனால், வரப்பிரதன் பலவழிகளில், வலது பக்கம் சுழலவும், இடது பக்கம் சுழலவும், பந்து வீசக்கூடிய வல்லமை உள்ளவர், அவரை ஒருபோட்டியில் மட்டும் விளையாட விட்டார்கள். அவர் இரு விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

6) அனுபவசாலிகள் என்று தேர்ந்தெடுத்தவர்களால் எதனையும் சாதிக்கமுடியவில்லை. அவர்களால் யாழ் நகரிலுள்ள கயிற்றுப்பாய் விரித்த தரையில்தான் அவர்களால் பந்துவீசவோ, துடுப்பெடுத்தாடவோ முடியுமென்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். இவர்களைத் தவிர்த்து, ஒருசில பல்கலை மாணவ வீரர்களைத் தெரிவு செய்திருந்தால் நன்றாக இருக்கும். ஏனெனில் அவர்கள் வருடாந்தம் கொழும்பு சென்று போட்டிகளில் பங்குபற்றிய அனுபவமுண்டு.

யாழ்ப்பாணத்தில் புற்தரை விளையாட்டு மைதானங்களைச் சகல பெரும் கல்லூரிகளிலும் அமைத்தல் வேண்டும். இதற்கு வேண்டிய நிதியம், வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர்களிடமிருந்து பெறலாம். நானோ நீயோ முதல் புற்தரை அமைப்பது என்று கல்லூரிகள் போட்டி மனப்பான்மையில் ஈடுபட்டால், நிச்சயம் சகல கல்லூரிகளிலும் புற்தரை மைதானம் தோற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

- டேவிட் தம்பிராஜா-

# சூரியகாந்தி

## மீண்டும் ஒரு போட்டி

அன்புள்ள வாசகர்களுக்கு,

சில தினங்களுக்கு முன்னால் ஆயிரம் ரூபாய் பரிசுப் போட்டி ஒன்றை அறிவித்திருந்தோம்.

எதிர்பாராத அளவுக்கு நிறைய வாசகர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கு பற்றினார்கள். பங்கு பற்றியோர் பரிசு பெற்றோர் அனைவருக்கும் நமது வாழ்த்துக்கள்.

இன்று இன்னொரு போட்டி பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

சென்ற தடவை போலவே இப்போதும் வாசகர்கள் உற்சாகமாகப் பங்கு பற்றவேண்டும் என்பதே நமது விருப்பம்.

இதற்கும் பரிசுத் தொகை ரூபாய் ஆயிரம்!

மக்கள் மத்தியிலே சற்று வித்தியாசமாகச் சிந்திக்கின்ற தன்மையும் வளர வேண்டும்,

நமது பள்ளிக்கூடங்களையும் அரசாங்க அலுவலகங்களையும் நமது சமூகப் பெரிய மனிதர்களையும் பார்க்கும் போது இந்தப் பிரதேசத்தில் ஒரு சிந்தனை வரட்சி ஏற்பட்டு விட்டதோ என்ற பயம்தான் ஏற்படுகிறது.

சிந்திக்கத் தெரியாதவர்களை ஓரளவுக்கு மன்னித்து விடலாம்,

ஆனால்

சிந்திக்க மறுப்பவர்களை என்ன செய்வது?

சென்ற தடத்திலேயே சென்று சென்று வாழ்க்கையை சுவையற்றதாகவும் விரக்தி நிறைந்ததாகவும் ஆக்குகின்ற மனிதர்கள்தான் நமது மத்தியிலே அதிகம்.

கிரியேட்டிவ்வாக சிந்திப்பவர்கள் இப்போதெல்லாம் அபூர்வமாகவேதான் தென்படுகிறார்கள்.

இது சமூக ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல.

''சூரிய காந்தி'' நடத்தும் போட்டிகள் பலரும் பங்கு பற்றக் கூடிய முறையிலும் ஆக்க பூர்வமாகச் சிந்திக்கக் கூடிய முறையிலுமே அமையும்.

- ஆசிரியர்

## தீவக கல்வி அபிவிருத்தி

கல்விப் பணிப்பாளர் (வலயம் 1) திரு. சு. இரத்தினராசா அவர்களின் தலைமையில் தீவக சிறார்களின் கல்வி அபிவிருத்திபற்றிய கலந்துரையாடல் வேலணைக் கல்விக்கோட்டத்தில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் பங்குபற்றிய அதிபர்களுக்கு எடுத்துரைக்கப் பட்டன.

❋ தீவகத்தில் மூடிக்கிடக்கும் பாடசாலைகள் பற்றிய விபரங்களும் அவை பற்றிய சேதங்களும் திரட்டப்பட்டு பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படல்.

❋ தீவகப் பாடசாலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள எதிர்நோக்கும் போக்குவரத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து ஆவனசெய்தல.

❋ இதுவரை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயம் திறக்கப்படாதுள்ளது. அங்கு இராணுவத்தினர் உள்ளதால் இராணுவ பிரிகேடியருடன் தொடர்புகொண்டு மீண்டும் அப்பாடசாலையைத் திறக்க தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளல்.

❋ தீவகப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர்கள் பற்றாக் குறையை நீக்குவதுடன் பல்வேறு சிரமங்களின் மத்தியில் கடமையாற்றும் தீவக ஆசிரியர்கள் 8 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றியிருப்பின் அவர்கள் மாற்றம்கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவை கவனத்திற்கெடுக்கப்படும்.

❋ பாடசாலைகளில் நூலகம் திறக்க, விளையாட்டு உபகரணங்கள் வழங்க, முறைசாராக்கல்வி ஏற்படுத்த, கட்டடங்கள் திருத்தியமைக்க உதவிகள் வழங்கப்படும் என்றார்.

## சம்பளக் கொடுப்பனவு

யாழ். அரச உயர்தொழில் நுட்ப நிறுவனத்தின் பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான 1997 யூலை மாதக் சொடுப்பனவுகள் தற்போது காசோலை மூலம் வழங்கப் படுகின்றன.

## கும்பாபிஷேகம்

மாதகல் நுணசை முருகன் ஆலய் கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது,

## வெளிக்கள நிலையம்

யாழ் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தால்நடாத்தப்படும் க.பொ த. உயர்தரப் பொதுப் பரிட்சைக்கா பாடசாலைகளின் விண்ணப்பங்களை உறுதிப் படுத்தும் முடிவு திகதி எதிர்வரும் 16.2.1998 ஆகும். இது தொடர்பான சுற்றறிக்கைகள் பாடசாலைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

## தலதா மாளிகைக்கு சீமெந்து அன்பளிப்பு

குண்டு வெடிப்பினால் சேதமடைந்த கண்டி தலதா மாளிகையைத் திருத்துவதற்கு தேவையான சீமெந்து முழுவதும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. புத்தளம் சீமெந்துக் கம்பனியின் முகாமைப் பணிப்பாளர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில் தலதா மாளிகையைத் திருத்துவதற்கு உண்மையான தேசிய உற்பத்திப் பொருள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், தொல்பொருள் ஆய்வாளர்கள், புனர்நிர்மாணத்திற்குப் பொறுப்பானவர்கள் கேட்குமிடத்து அதற்குத் தேவையான விசேட சீமெந்துகளையும் வழங்க தாம் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளர். சுவிஸ்லாந்தில் உள்ள வங்கி ஒன்றுடன் கலந்தாலோசிக்கப்பட்டே இம் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேயிலையின் விலை அதிகரிக்கும் அபாயம்

கென்யாவிலும் தேயிலைத் தோட்டத்தொழிலாளர் சம்பள உயர்வுகோரி தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் இலங்கையில் தோட்டத்' தொழிலாளரின் வேலை நிறுத்தம் காரணமாக தேயிலை உற்பத்தி முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இருநாடுகளும் உலகின் மிகப்பெரும் தேயிலை உற்பத்தி நாடுகளாகும். சம்பள உயர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என கென்யா தேயிலைத் தொழிலாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன. இதனால் சர்வதேச சந்தையில் தேயிலையின் விலை அதிகரிக்கும் அபாயம் ஏற் பட்டுள்ளது.

## நுளம்புத்திரிக்கு செலவு எவ்வளவு?

நுளம்புகள்! நுளம்புகள்!! நுளம்புகள்!!!

ஒரே தொல்லை.

நுளம்புத்திரி இல்லாமல் சீவிக்கவே முடிவதில்லை. கடைக்குச் செல்லும் ஒருவர் ''ஒரு இறாத்தல் பாணும், ஒரு நுளம்புத் திரிப்பெட்டியும் தாருங்கள்'' என்று கேட்டு வாங்குவதை இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகக் காண முடிகிறது.

''பாண்'' மாதிரித்தான் நுளம்புத் திரியும் அத்தியாவசிய தேவை ஆகிவிட்டது.

அண்மையில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின் மூலம் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் நாளொன்றுக்கு ஏழு லட்சம் நுளம்புத்திரிகள் கொழுத்தப்படுவது தெரிய வந்துள்ளது.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் இலங்கை முழுவதிலும் நாளொன்றுக்கு இரண்டு மில்லியன் நுளம்புத்திரிகளுக்கு மேல் கொளுத்தப்படுகின்றன.

எதற்கு? தற்காலிகமாக நுளம்புகளை விரட்டுவதற்கு!

ஆம் தற்காலிகமாகத்தான்!

நாளொன்றுக்கு இரண்டு மில்லியன் நுளம்புத்திரிகள் என்றால் மாதத்துக்கு எவ்வளவு? வருடத்துக்கு எவ்வளவு?

ரூபாக் கணக்கில் இதன் பெறுமதி எவ்வளவு?

அடேயப்பா, எத்தனை கோடி கோடி ரூபாய்க்கள்!

அத்தனையும் சும்மா சாம்பலாகும் பணம்!

இந்தச் செலவு தேவைதானா?

அது இருக்கட்டும், நம்ம ஊர் நிலைமை எப்படி?

யாழ்ப்பாணத்தில் ஒரு நாளைக்கு எத்தனை நுளம்புத்திரிகள் கொளுத்தப்படுகின்றன?

யாராவது கணக்குப் போட்டுப் பார்த்தார்களா?

இந்தப் பணம் அநியாயச் செலவுதானே? கொஞ்சம் விழிப்பான உற்சாகத்துடன் செயற்பட்டால் இதைத் தடுக்க முடியாதா?

நுளம்புகள் எங்கே உற்பத்தி ஆகின்றன? கட்டுப்படுத்துவது எப்படி?

நுளம்புக் கடியினால் ஏற்படும் தொல்லைகளை விட வேறு வியாதிகளும் வந்து விடுகின்றனவே!

தேங்கி நிற்கும் நீரிலிருந்துதானே நுளம்புகள் வருகின்றன.

நீர் தேங்கி நிற்பதைத் தடுப்பதில் தனிப்பட்டவர்களும், அரச திணைக்களங்களும் சற்று உற்சாகத்துடன் செயல்படக் கூடாதா?

## யாழ்ப்பாண கல்வி நிலை...

மாணவர்களோடு, ஆசிரியர்களில் அனேகரும் தற்போது யாழ். குடா நாட்டில் இருக்கும் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையினாலே யாழ். குடா நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். ஒரு பாதுகாப்பான சூழ்நிலை வந்தால் மட்டுமே இத்தொகையை அதிகரிக்கலாமே தவிர வேறு எந்த வழியிலும் இதனை அதிகரிக்க முடியாது. என்பதே உண்மையானவிடயம்.

வலயம் ஒன்றில் மிகவும் கஸ்டங்களை எதிர்நோக்குவது நெடுந்தீவு கல்விகோட்டமாகும். இங்கு பத்து பாடசாலைகள் இருக்கின்றது. இதில் ஒன்று மகாவித்தியாலயம். இக்கோட்டத்தில் ஆயிரத்து இருநூற்றி முப்பத்தொன்பது மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்கள் யாழ். நகர் பகுதியில் ரியூசன் வகுப்புகளுக்கு வந்து பயில முடியாத நிலை, னெனில் போக்குவரத்து சிக்கல், பொருளாதார பிரச்சினை என்பனவுண்டு. இங்குள்ள பாடசாலைகளுக்கு கல்வி கற்பிப்பதானால் 75 ஆசிரியர்கள் தேவை. ஆனால் 34 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றனர். பாடசாலைக்கு போதியளவு தளபாட வசதியில்லை. கல்வி திணைக்களகத்திற்கு வரும் தளபாடங்களில், சில செல்வாக்குடைய பாடசாலைகளுக்கு போகுதே தவிர இப்படியான பாடசாலைக்கு போவது குறைவு. அப்படிச் சென்றாலும் அதனை எடுத்துச்செல்வதற்கு பாரிய பணம்தேவை. இதனால் இது தொடர்பாக அக்கரை செலுத்தப்படுவதில்லை.

வலயம் இரண்டில் மிகவும் கஸ்டங்களை எதிர்கொள்ளும் கோட்டம் மருதங்கேணி கல்விக் கோட்டம் அனேக பாடசாலைகள் இராணுவ கட்டுப்பாடு இல்லாத பகுதியில் இருக்கின்றது. இக்கோட்டத்தில் 19 பாடசாலைகள் இருக்கின்றன. 17 பாடசாலைகள் இயங்குகின்றன. 2 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன - சுமார் 1700 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 120 ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். இவர்களின் அனேகர் தொண்டர் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் இருந்து 21 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் வெளியே செல்ல இராணுவம் அனுமதிப்பதில்லை. எனவே இப்பகுதி மாணவர்கள் தமக்கு ஏனைய பாடசாலைகளில் கல்விகற்கும் வாய்ப்பை இழக்கின்றனர். அத்துடன் ரியூசன் வகுப்புகளுக்கும் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு கல்வி போக்குவரத்து நிலையில் ஊசல் ஆடுகின்றது.

இராணுவ கட்டுப்பாடு இல்லாமையினால் இலவச புத்தகம், இலவச சீருடை என்பன கூட அப்பகுதிக்கு எடுத்துச் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. கொப்பி, பேனா, பென்சில் போன்றவற்றை கட்டுப்பாட்டு அடிப்படையில் எடுத்துச் செல்ல முடியும். போக்குவரத்து கஸ்டம் இருப்பதினால் ஏனைய பகுதியில் இருந்து ஆசிரியர்கள அப்பகுதிக்கு செல்வதற்கு மறுக்கின்றனர். இப்பாடசாலைகளின் அவசிய சேவைகளை கூட கல்வித் திணைக்களம் மேற்கொள்ள முடியாத நிலையுள்ளது.

கிளிநொச்சி கல்வி திணைக்களத்தில் பளைகோட்ட கல்வி அலுவலகத்தை பொறுத்த மட்டில் தற்போது இவ்கோட்டத்தில் 2500 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் 110 ஆசிரியர்களில் 35 பேர் தொண்டர் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 12பாடசாலைகளில் ஒன்று இயங்கவில்லை. ஆசிரியர் சம்பளப் பணம் மட்டும் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றது. பாடசாலை அவசிய தேவை, நிதி கட்டிட திருத்தம், தளபாடம் திருத்தம், என்பவற்றிக்கு கூட பணம் ஒதுக்கப்படவில்லை. இதனால் இக்கோட்டம் மிகுந்த சிரமத்தின் மத்தியில் இயங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# பழைய நிலையா? புதிய வழியா?

இந்தியாவின் மக்களவைத் தேர்தல் இம் மாதம் 16ந் திகதி ஆரம்பமாகிறது. 1996ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மீண்டும் ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பே மக்கள் தேர்தலைச் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் 1996ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாததால் இரண்டு ஆண்டு காலத்திற்குள் மீண்டும் பாரதத்தில் தேர்தல்களை கட்டத் தொடங்கிவிட்டது.

1996ல் நடந்த பொதுத் தேர்தலில் தனிக்கட்சி என்ற வகையில் பாரதீய ஜனதாக் கட்சியே அதிக ஆசனங்களைக் கொண்டிருந்தது. இந்திய ஜனநாயகச் சட்டத்தின்படி கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சியை ஆட்சியமைக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுவார். இதனடிப்படையில் அன்றைய இந்திய ஜனாதிபதியாக இருந்த சங்கர் தயாள் சர்மா பாரதீய ஜனதாக் கட்சியை ஆட்சியமைக்குமாறு அழைப்பு விட்டார். இந்திய வரலாற்றில் பாரதீய ஜனதாக் கட்சி திரு. அடல்பிகாரி வாஜ்பாயை பிரதமராகக் கொண்டு ஆட்சிப் பீடம் ஏறியது.

சிறந்த அரசியல் சாணக்கியமும், கவித்துவமும் நிறைந்த வாஜ்பாஜ் இந்தியாவுக்குப் பொருத்தமான பிரதமர் என்பதை இந்திய அரசியல் வாதிகள் அறியாதவர்கள் அல்ல, ஆனால் பதவி ஆசை யாரைத்தான் விடும்? இதனால் வாஜ்பாஜ்தலைமையிலான ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குத் தேவையான ஆதாரங்கள் - சான்றுகளைத் தேடி எடுத்தனர், பாரதீய ஜனதாக் கட்சி மதவாதக் கட்சியென்றும், பாபர் மசூதியைத் தகர்த்தவர்களென்றும் ஆட்சியைக் கவிழ்க்க ஆதாரமாக்கினர், இதில் இந்திய காங்கிரஸ் உட்பட பல அரசியல் கட்சிகள் இணைந்து ஐக்கிய முன்னணியைத் தோற்றுவித்தனர்.

இந்திய ஜனநாயகச் சட்டத்தின்படி ஆட்சியமைக்கும் எந்தக் கட்சியும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் தனது ஆதரவு பலத்தை - நம்பிக்கைத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். இவ்விடத்தில் தான் பாரதிய ஜனதாக் கட்சி கோட்டை விட்டது. காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய முன்னணியின் ஆசனங்கள் பாரதிய ஜனதாவின் ஆசனங்களைப் பலமிழக்கச் செய்தது. இதை உணர்ந்த வாஜ்பாஜ் பதின்மூன்று நாள் வகித்த பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்தார். எனினும் தான் மீண்டும் பிரதமராக வருவேன் என்ற நம்பிக்கையை வாஜ்பாஜ் இராஜினாமாச் செய்யவில்லை.

பதின்மூன்று நாள் மட்டும் பிரதமராக இருந்து வாஜ்பாஜ் விலகிச் செல்ல, ஐக்கிய முன்னணியின் உருவாக்கத்திற்கு காரணகர்த்தாவாக இருந்த எச். டி. தேவகௌடா, தனது பரிவாரங்களுடன் அரியாசனம் ஏறினார், அரசியல் கட்சிகளின் அதிகாரமுள்ள தலைவர்களைச் சந்தித்து பிரதமர் பதவியை தனதாக்கிக் கொண்ட பெருமை தேவகௌடாவுக்கு உண்டு. எனினும் காங்கிரஸ் கட்சியின் திருகுதாளப் போக்கை கௌடா அறியாது - தெரியாது இருந்திருப்பாரா என்பது கேள்விக்குறி தான்.

இந்திய அரசியலில் பிரதமர் ஆசனத்தைக் கைவிடக் கூடாது என்பதில் காங்கிரஸ் கட்சி இறுக்கமாகவே இருந்துள்ளது. பிரதமர் ஆசனம் கைநழுவினாலும், அந்த ஆசனத்தில் இருப்பவர் தனது கைப்பொம்மையாக இருக்க வேண்டும் என்பதுவும், காங்கிரஸ் இறுக்கம்தான், தனது குரலுக்கு செவிசாய்க்காத ஆட்சியை ஏதோ ஒரு வழியில் கவிட்டு விடுவது தான் காங்கிரசின் கலாசாரம். தொன்று தொட்டு கடைப்பிடித்து வந்த கலாசாரத்தை, காங்கிரஸ் தேவகௌடா மீதும் பிரயோகித்தது, இதனால் தேவகௌடா தனது பிரதமர் பதவியை இராஜனாமாச் செய்தார். எனினும் இந்தியாவின் பிரதமர் பதவியை வகித்த பெருமை அவருக்கு ஆறுதலை அளித்திருக்கும். காங்கிரசின் போக்கினால் தேவகௌடாவின் பதவி பறிபோனதையிட்டு ஐக்கிய முன்னணி அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை ''தாமும்'' பிரமாதமாக வரலாம் என்ற நப்பாசையில் காங்கிரஸ் மீது குறை கூறவும்யாரும் துணியவில்லை இதனால் ஐக்கிய முன்னணியில் ஏற்பட இருந்த பிளவு தவிர்க்கப்பட்டது.

காங்கிரஸ் மீது ஐக்கிய முன்னணி சீற்றம் கொண்டிருந்தால் அன்றே பொதுத் தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும் தேவகௌடாவின் அமைதியான போக்கும் சந்திரபாபு நாயுடுவின் வேகமான செயற்பாடும்ஐக்கிய முன்னணியைக் காப்பாற்றியது. தனிக்கட்சிகள் அறுதிப்பெருப்பான்மையை கொண்டிராததனால் உருவாகிய ஐக்கிய முன்னணி காங்கிரஸின் சுயரூபத்தைக் கண்டு கொண்டது. இதனால் மீண்டும் மக்களின் வாக்குகளைத் தேடிச்செல்வது காலத்தின் தேவையாகி விட்டது. நிலைமையை உணர்ந்து கட்சிகளின் போக்கை அறிந்து மக்கள் வாக்களிக்கத் தவறின் இந்தியாவில் மீண்டும் தொங்கு பாராளுமன்ற நிலையையும் புதிய ஐக்கிய முன்னணிகளின் தோற்றத்தையும் தடுக்க முடியாது போய் விடும்.

''விதுரன்''

## ஈராக் விவகாரம் பேசித் தீர்க்க வேண்டும்

**- பாப்பரசர்**

ஈராக் விவகாரத்தை ஆயுதம் ஏந்தாமலே தீர்த்து வைக்க இன்னமும் வாய்ப்பு இருப்பதாக பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் தெரிவித்தார்'

ஆயுத மோதல்களைத் தவிர்த்து இராஜதந்திரமுறைகளில் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

# வளைகுடா நெருக்கடியை தீர்க்க அரபுலீக் முயற்சி

ரஷ்யா, பிரான்ஸ், அரபு நாடுகள் போன்றவற்றின் உதவியுடன் வளைகுடா நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் அரபுலீக் ஈடுபட்டுள்ளது. இது பற்றிய தீர்மானம் ஒன்றை ஐ. நா. சபையில் சமர்பிக்க திட்டமிட்டிருப்பதாக அரபுலீக் அறிவித்துள்ளது. இத்தீர்மானத்தில் ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை தடுத்தல், ஈராக்கின் மீது ஐ. நா. பரிசோதனை மேற்கொள்வதற்கு புதிய வழிமுறைகள் என்பன அடங்கியிருக்கும். இத்தீர்மானம் மிக விரைவில் ஐ. நா, பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிகப்படுமென்று அரபுலீக்ஸ் பேச்சாளர் 'ஜவால் ஹமீட்' ஏ. எவ். பி. செய் ஸ்தாபதினத்திற்கு தெரிவித்துள்ளார்.

## களுத்துறைசிறையில் துக்கதினம் அனுஷ்டிப்பு

களுத்துறை தடுப்பு முகாமில் பெரும்பான்மையினக் கைதிகளால் கொலை செய்யப்பட்ட மூவருக்கான நாற்பத்தைந்தாவது நாள் சமயக் கிரியை கடந்த 25ம் திகதி நடைபெற்றது, இக்கிரியைகளை களுத்துறை முருகன் ஆலய பிரதமகுரு நடத்தினார், இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக தானமும் வழங்கப்பட்டது,

களுத்துறை தடுப்பு முகாமில் ஒவ்வொரு மாதமும் பன்னிரண்டாம் திகதியைத் துக்கதினமாக கைதிகள் அனுசரித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது,

## அமைச்சர் தப்பினார்

சிரேஷ்ட அமெரிக்கா அதிகாரி ஒருவரும், கொலம்பியாவின் பாதுகாப்பு அமைச்சரும் பயணம் செய்த ஹெலிகொப்டரை நோக்கி இடதுசாரிக் கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர், ஆயினும் இந்தக் ஹெலிகொப்டர் தாக்குதலுக்கு இலக்காக வில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது,

## குடும்பஸ்தர் பலி

வாழைச் சேனையில் புதுகுடியிருப்புபகுதி மீது படையினர் மேற்கொண்ட எறிகனைத் தாக்குதலில் பி தயாளகுகன் என்ற குடும்பத்தினர் பலியானர் இவரது நான்கு வயது மகள்தனுஜாவும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

## விமானப்...

படை முக்கிய பங்களிப்பை செய்யக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்,

விமான ஓட்டிகளுக்கான பயிற்சித் திட்டத்தில் தற்சமயம் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது, புதிதாகச் சேர்த்துக்கொள்ளப் படுவோர் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்,

இலங்கையில் ஆண்டு ஒன்றுக்கு 16 பேரை விமான ஓட்டிகளாக பயிற்றுவிக்கக் கூடிய வசதிகளே உள்ளன. இதன் காரணமாகவே புதிய விமான ஓட்டிகள் பயிற்சிக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

இலங்கை விமானப் படைக்கு சுமார் 250 விமானிகள் தேவைப் படுகின்றனர், எனினும் தற்சமயம் சுமார் 160 பேர் வரையிலேயே சேவையில் உள்ளனர். என்றும் எயர்மாஷல் ஒலிவர் ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆயுதக்...

னேமு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் இத் தொழிற்சாலையிலிருந்து ரி: 56 ரக துப்பாக்கிச் சன்னங்கள் இரட்டைக்குழாய் துப்பாக்கி என்பவற்றைத் தேடுதலின் போது கைப்பற்றியதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## அமெரிக்காதான் உலக காவலாளி

ஈராக் மீதான அமெரிக்காவின் போக்கை தென்னாபிரிக்காவின் போக்கை தென்னாபிரிக்க ஜனதிபதி நெல்சன் மண்டேலா வன்மையாகக் கண்டித்துள்ளார். பிராந்திய விடயங்களில் அமெரிக்கா அநாவசியமாகத் தலையிடுகிறதெனக் குற்றஞ் சாட்டிய மண்டேலா முழு உலகத்திற்கும் தானே காவலாளி என்ற மனப்பான்மையை அமெரிக்கா கைவிட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை ஈராக்கில் ஆயுதங்களைத் தேடுவதற்காக அனுப்பப்படும் ஐ. நா. வின் குழுவில் தேவைக்கதிதமாக அமெரிக்கர்கள் அங்கம் வகிப்பது விருபத்தக்கதல்ல எனவும் மண்டேலா தெரி

## ஈராக் மீதான தாக்குதலுக்கு 370 யுத்த விமானங்கள் தயார்

பிரிட்டனுக்குச் சொந்தமான டொனாட்டா போர் விமானங்கள் குவைத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன ஈராக்கின் மீது தாக்குதலை மேற்கொள்ளும் நோக்குடன் மேலும் பல போர் விமானங்கள் அங்கு அனுப்பப்படலாமென செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. நா.வின் கோரிக்கையை ஈராக் ஏற்றுக்கொள்வதற்கு வழங்கிய அவகாசம் முடிந்து கொண்டிருப்பதாகவும் இதனை ஈராக் உதாசீனம் செய்யுமாயின் ஈராக் மீது இராணுவ பலம் பயன்படுத்தப் படுமென்று பிரிட்டனும் அமெரிக்காவும் எச்சரித்துள்ளன.

இதேவேளை ஈராக் மீதான தாக்குதலுக்கு 30 விமானந்தாங்கிக் கப்பல்களும் 370 யுத்த விமாங்களும் தயார் நிலையில் இருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன.


## தேவை

❋ அச்சுக்கோப்பவர்கள் (ஆண் - பெண்)

❋ யந்திர இயக்குனர்கள்

நேரில் வரவும்:

**சூரிய காந்தி**
68/1, ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.



## கபிலா காலணி அகம்

BATA
D. S. I
RANPA
SEEBA

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட அனைத்து காலணி வகைகளையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 9ம் தேதி 68, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசாமி.